**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 27.10.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதில் வளரும் நாடுகளுக்கான நிதி ஆதாரங்கள், தார்மீக ரீதியில் அமைதல் அவசியம் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுச்சேரியில், புதிதாக வாங்கப்பட்டுள்ள 25 மின்சார பேருந்துகளை, இன்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் கொடியசைத்து தொடக்கி வைத்தனர்.

வங்கக் கடலில் உருவாகி உள்ள மோன்தா புயல், தீவிரப் புயலாக வலுப்பெற்று நாளை மாலை மற்றும் இரவில், காக்கிநாடா அருகே, ஆந்திரக் கரையை கடக்கக் கூடும் என, எதிர்பார்க்கப் படுகிறது.

புயல் நிலவரங்களை எதிர்கொள்ள, ஆந்திரா, மற்றும் ஒடிசா மாநிலங்களிலும், புதுச்சேரியின் ஏனாம் பகுதியிலும், பல்வேறு அரசுத் துறைகள் முற்றிலும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

----------------------

மோடி கட்டுரை (9)

பருவ நிலை நீதி என்பதை, இந்தியா தன் தார்மீக கடமையாகவும், பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கான, உலகளாவிய செயல்பாடுகளின் மையப் புள்ளியாகவும் கருதுவது குறித்து, மத்திய அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கான மானியங்கள், மற்றும் நிதி ஆதாரங்கள், வரலாற்று ரீதியில், பிரச்சனைக்கு யார் காரணம்

என்பதை கண்டறிந்து, வளரும் நாடுகளுக்கு நீதி வழங்கும் வகையில் அமைதல் அவசியம் என்றும், பிரதமர் வலியுறுத்தி உள்ளார்.

-----------------------

*மின்சார பேருந்து 1 (18)*

புதுச்சேரியில், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ், 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு மூலம் வாங்கப்பட்டுள்ள 25 மின்சார பேருந்துகளை, இன்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் கொடியசைத்து தொடக்கி வைத்தனர். மறைலையடிகள் சாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இ-பஸ் டிப்போவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மாநிலங்களவை உறுப்பினர் திரு. செல்வகணபதி, தலைமை செயலர் டாக்டர் சரத் சௌகான், போக்குவரத்துத் துறை செயலர் டாக்டர் முத்தம்மா, புதுச்சேரி ஸ்மார்ட் சிட்டி மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. யாசின் சௌத்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் போது, ஸ்மார்ட் நகர மேம்பாட்டு நிறுவனத்தின் நிதி மூலம் வாங்கப்பட்டுள்ள 38 இ-ரிக்ஷாகளும், கொடியசைத்து தொடக்கி வைக்கப்பட்டன. ஆட்டோ சவாரிக்கான முன்பதிவு செயலியும் வெளியிடப்பட்டது.

துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியது போல, புதுச்சேரியை பெஸ்ட் புதுச்சேரியாக மேம்படுத்துவதில், முக்கிய அத்தியாயமாக இந்நிகழ்ச்சி அமைந்து இருப்பதாக கூறினார். இது புதுச்சேரி நகரின்

*மின்சார பேருந்து 2 (5)*

சுற்றுச் சூழலை மேம்படுத்துவதில் முக்கிய நடவடிக்கையாகவும் அமையும் என்று அவர் தெரிவித்தார். ஸ்மார்ட் நகர திட்டத்தின் கீழ், புதுச்சேரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள், புதுச்சேரியை முன்மாதிரி பசுமை நகரமாக மேம்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். துணை நிலை ஆளுநர் மேலும் கூறுகையில்.......

**(வாய்ஸ்-கைலாஷ்நாதன்)**

*மின்சார பேருந்து* 3 (9)

முதமைச்சர் திரு. ரங்கசாமி இந்நிகழ்ச்சியில் பேசுகையில், புதுச்சேரியில் புதிதாக இயக்கப்படும் மின்சார பேருந்துகள், நகரத்தின் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையிலும், பொது மக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையிலும் அமைந்து இருப்பதாக கூறினார். புதுச்சேரியில் மொத்தம் வாங்கப்பட உள்ள 100 மின்சார பேருந்துகளில், தற்போது வாங்கப்பட்டுள்ள 25 பேருந்துகள் போக, எஞ்சிய 75 பேருந்துகள், விரைவில் வந்து சேரும் என்று அவர் தெரிவித்தார். முதலமைச்சரின் உரையில் இருந்து ஒருபகுதி.......

**(வாய்ஸ்-ரங்கசாமி)**

*மின்சார பேருந்து* 4 (4)

இ-பஸ் டிப்போவில் நடைபெற்ற நிகழ்ச்சியை தொடர்ந்து, ராஜீவ் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை அருகே, புதிதாக அமைக்கப் பட்டுள்ள, பயணிகளுக்கான ஸ்மார்ட் நிழற்குடையை, துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் திறந்து வைத்தனர்.

*மின்சார பேருந்து* 5 (13)

புதுச்சேரியில் தற்போது வாங்கப்பட்டுள்ள 25 மின்சார பேருந்துகளில் 10 ஏசி பேருந்துகளும், 15 ஏசி அல்லாத பேருந்துகளும் அடங்கும். இதில், 2 ஏசி பேருந்துகளும், 15 ஏசி அல்லாத பேருந்துகளும், ஏற்கனவே உள்ள பிஆர்டிசி வழித்தடங்களில், நிறுத்தப்பட்ட டீசல் பேருந்துகளுக்கு பதிலாக இயக்கப்படும். எஞ்சிய 8 ஏசி பேருந்துகள், நகரின் முக்கிய சுற்றுலா தலங்களுக்கு இடையில் இயக்கப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. ஹைதராபாத்தைச் சேர்ந்த இவே டிரான்ஸ் தனியார் நிறுவனம், ஒப்பந்த அடிப்படையில் இப்பேருந்துகளை இயக்க தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. 12 ஆண்டுகளுக்கான இந்த ஒப்பந்தத்தின் கீழ், புதுச்சேரி அரசு, கிலோ மீட்டர் அடிப்படையில், இந்நிறுவனத்திற்கு ஊதியம் வழங்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. மின்சார பேருந்துகளுக்கு, மின் ஊட்டம் வழங்குவதற்கான சார்ஜிங் வசதிகளையும், இவே நிறுவனம், இ-பஸ் டிப்போவில் உருவாக்கி உள்ளது.

-----------------------

*புயல் 1 (18)*

தென்மேற்கு மற்றும் அதை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில், இன்று, சென்னைக்கு கிழக்கு-தென்கிழக்கே, சுமார் 520 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ள மோன்தா புயல், வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளைக் காலை தீவிரப் புயலாக வலுப்பெறக் கூடும் என்றும், நாளை மாலை மற்றும் இரவில், மசூலிபட்டினம்-கலிங்கப்பட்டினம் இடையில், காக்கிநாடா அருகே, ஆந்திரக் கரையை கடக்கக் கூடும் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தீவிரப் புயல் கரையை கடக்கும் போது, அதிகபட்சம் மணிக்கு 110 கி.மீ வரையிலான வேகத்தில், காற்று வீசக்கூடும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும், கனமழை பெய்யக் கூடும் என்றும், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோர பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

----------------------

*புயல் நடவடிக்கை (13)*

மோன்தா புயல் மற்றும் கனமழை நிலவரங்களை எதிர்கொள்ள, ஆந்திரபிரதேஷ் மற்றும் ஒடிசா மாநிலங்களிலும், வடதமிழக மாவட்டங்களிலும், அனைத்துத் துறைகளும் முற்றிலும் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளன. ஆந்திரத்தை ஒட்டியுள்ள, புதுச்சேரியின் ஏனாம் பகுதியில், மோன்தா புயல் நிலவரங்களை சமாளிப்பதற்கான தயார் நிலை குறித்து, மண்டல நிர்வாக அதிகாரி திரு. அன்கித் குமார் இன்று, அனைத்துத் துறை அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார். உதவி-மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, விசாகப்பட்டினத்தில் இருந்து, 28 பேர் அடங்கிய தேசிய பேரிடர் நிர்வாகப் படைக் குழு ஒன்றும்,

புதுச்சேரியில் இருந்து, 40 பேர் அடங்கிய ஐஆர்பி குழு ஒன்றும், ஏனாம் சென்று சேர்ந்துள்ளன. ஏனாமில், சாவித்ரி நகர், கிரயம்பேட், தரியல்திப்பா உட்பட, 18 இடங்களில் புயல் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டு, பாதிப்பு வாய்ப்பு அதிகம் உள்ள இடங்களில்.6 ஜெனரேட்டர்களும் நிறுவப் பட்டுள்ளன.

-----------------------

*ஜிஎஸ்டி ஜம்மு-காஷ்மீர்* 1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், ஜம்மு-காஷ்மீரில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறுகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…..

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி ஜம்மு-காஷ்மீர்* 2 (15)

**(வாய்ஸ்)**

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், கைவினை, சுற்றுலா போன்ற பல்வேறு துறைகளுக்கு, வரிக் குறைப்பு அறிவிக்கப் பட்டுள்ளதால், குறிப்பாக ஜம்மு-காஷ்மீரில் முக்கிய பலன்கள் ஏற்பட்டுள்ளன. ஜம்மு-காஷ்மீரின் புகழ்பெற்ற பஷ்மினா சால்வைகள், மற்றும் தரை விரிப்புகள் மீதான ஜிஎஸ்டி, 12ல் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், இப்பொருட்களின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள, பெரும் எண்ணிக்கையிலான நெசவாளர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரம் வலுப்பெற்றுள்ளது. ஜம்மு-காஷ்மீரின் முக்கிய உற்பத்தி பொருட்களில் ஒன்றான, பாகெட்டில் அடைக்கப்பட்ட பாதாம் பருப்பு, 12 சதவிகித வரி அடுக்கில் இருந்து 5 சதவிகித அடுக்கிற்கு மாற்றப் பட்டுள்ளதால், இத்துறையினரும் ஊக்கம் பெற்றுள்ளனர். 7 ஆயிரத்து 500 ரூபாய் வரையிலான ஓட்டல் அறை வாடகை மீதான ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், ஜம்மு-காஷ்மீருக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து, உள்ளூர் வர்த்தகம்

மற்றும் வேலை வாய்ப்புகள் பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------

லஞ்ச ஒழிப்பு (9)

லஞ்ச ஒழிப்பு வாரத்தை ஒட்டி, புதுச்சேரி அரசின் தலைமை செயலகத்தில் இன்று, நேர்மைக்கான உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தலைமைச் செயலர் டாக்டர் சரத் செளகான், உறுதி மொழியை வாசிக்க, தலைமை செயலக ஊழியர்கள் அனைவரும், உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர். தொடர்ந்து அரசு செயலர் திரு. கேசவன் தலைமையில், தமிழிலும், நேர்மைக்கான உறுதிமொழி ஏற்கப்பட்டது. காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துணை ஆட்சியர் திரு. செந்தில்நாதன் தலைமையில், அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், நேர்மைக்கான உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர்.

-----------------------

*சி.பி ராதாகிருஷ்ணன் (20)*

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், நாளை முதல், தமிழகத்தில் 3 நாள் பயணம் மேற்கொள்கிறார். குடியரசுத் துணைத் தலைவராக பதவியேற்ற பின்னர், அவர் தமிழகம் வருவது இதுவே முதல் முறையாகும். குடியரசுத் துணைத் தலைவர் இப்பயணத்தின் போது, கோவை, திருப்பூர், மதுரை, மற்றும், ராமநாதபுரத்தில், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். நாளை கோவை விமான நிலையத்தில் வந்து இறங்கும் குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு, கோவை மக்கள் சார்பில், அன்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. கொடிசியா மைதானத்தில், கோவை மக்கள் பேரவை சார்பில் பாராட்டு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. குடியரசுத் துணைத் தலைவர் நாளை கோவையில், பேரூர் மடத்திற்கு செல்வதுடன், சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்கிறார். நாளை மாலை அவர் திருப்பூர் சென்று, திருப்பூர் குமரன், மற்றும், மகாத்மா காந்தி சிலைகளுக்கு மலரஞ்சலி செலுத்துகிறார். வரும் புதன் கிழமை திருப்பூரில், பாராட்டு விழாவில் கலந்து கொண்ட பின்னர், அன்று மாலை அவர் மதுரை சென்று, மீனாட்சி அம்மன் கோவிலில் வழிபாடு செய்கிறார். வரும்

வியாழன் கிழமை, ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி விழாவிலும் குடியரசுத் துணைத் தலைவர் கலந்து கொள்வார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதில் வளரும் நாடுகளுக்கான நிதி ஆதாரங்கள், தார்மீக ரீதியில் அமைதல் அவசியம் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுச்சேரியில், புதிதாக வாங்கப்பட்டுள்ள 25 மின்சார பேருந்துகளை, இன்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் கொடியசைத்து தொடக்கி வைத்தனர்.

வங்கக் கடலில் உருவாகி உள்ள மோன்தா புயல், தீவிரப் புயலாக வலுப்பெற்று நாளை மாலை மற்றும் இரவில், காக்கிநாடா அருகே, ஆந்திரக் கரையை கடக்கக் கூடும் என, எதிர்பார்க்கப் படுகிறது.

புயல் நிலவரங்களை எதிர்கொள்ள, ஆந்திரா, மற்றும் ஒடிசா மாநிலங்களிலும், புதுச்சேரியின் ஏனாம் பகுதியிலும், பல்வேறு அரசுத் துறைகள் முற்றிலும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**